## ஏப்ரல் - 2

**"ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக் கடவோம். - கலா 6 : 10**

கிறிஸ்தவன் தன்னுடைய சொந்த சமயத்தையும், வசதியையும் செலவு செய்து எல்லா மனுஷருக்கும் நன்மை செய்யத் தயாராக இருக்க வேண்டியவனாக இருக்கிறான். ஆனால், சகோதரர்களுக்காகத் தன் சொந்த ஜீவனையும் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டியவனாக இருக்கிறான். அதாவது, தன்னுடைய நேரத்தை கர்த்தருடைய சகோதரருக்கு சத்தியத்தைப் பரப்புவது அல்லது எந்த விதத்திலாவது அவர்கள் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை அணிந்து கொண்டு தீங்கு நாளில் நிற்க உதவுவது என்ற அர்த்தத்தில், ஒவ்வொரு நாளும் தன் ஜீவனைக் கொடுப்பதற்காக சந்தர்ப்பங்களைத் தேட வேண்டியவனாயிருக்கிறான். **-Z ’03, 121 (R 3180)**

நன்மை செய்கிறதிற்காக எல்லாப் பக்கங்களிலும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. சுரங்கத் தொழிலாளி வைரத்தையோ அல்லது இரத்தினத்தையோ பார்த்தவுடனே அதைப் பற்றிக் கொள்ளுகிறது போல, சந்தர்ப்பங்களைப் பார்த்தவுடனே அவைகளைப் பற்றிக் கொண்டு உபயோகப்படுத்த வேண்டும். யாருக்கும், எல்லோருக்கும் நன்மை செய்ய நாடி, தேவனுடைய பிள்ளைகள் நிஜமான கிறிஸ்து மார்க்கத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். நம்முடைய நற்கிரியைகள் ஒரு தெளிந்த புத்தியினால் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். "இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டும்" என்ற நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகளின் தத்துவத்தின் பேரில், அந்தத் தெளிந்த புத்தி விசேஷமாக சகோதரர்களுக்கு ஊழியஞ் செய்ய வழிகாட்டும். ஆனால் மற்றவர்களைத் தவிர்த்து அல்ல. **-P ’36, 48.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

1கொரி 15:58; 2தெச 3:13; 2கொரி 4:1; எபி 10:36; பிர 3:12; 9:10; மத் 5:43,44; யோவா 9:4; 12:35; சங் 37:3,27; மாற் 3:4; லூக் 6:35; 1தெச 5:15; 1தீமோ 6:17,18; தீத்து 2:14; 3:8.

**கோபுர வாசிப்பு : Z ’13, 357 (R 5357)**

**வினாக்கள்** : நான் இந்த வாரத்திலே நன்மை செய்வதற்கான வாய்ப்புக்களைப் பயன்படுத்தியிருக்கின்றேனா? யாருக்கு? எந்தெந்தச் சந்தர்ப்பங்களில்? உதவியாக அல்லது இடையூறாக இருந்தது என்ன? பலன்கள் என்ன?